பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 29 (12—2—68) திங்கள் ★ வெளியூர்: மாசி 1 (13—2—68) செவ்வாய் [இதழ்: 200

## மொழித் தகராறின் விளைவு—ஆழ்ந்த கவலைக்குரியது

ஜெய்ப்பூர், பிப். 11—

"மொழித் தகராறின் விளைவாகத் தற்போது பரவலாக ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சி, ஆழ்ந்த கவலைக்குரியதாகும்.

"கல்வியின் தரத்தையும், நாட்டின் ஒற்றுமையையும் பாதுகாக்கும் அளவில், இப்பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமாகும்"

என்று, உஸ்மானியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டி. எஸ். ரெட்டி வற்புறுத்தியுள்ளார்.

# சி. சுப்பிரமணியம் மீது உரிமைப் பிரச்சினை

## சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் இரெ. இளம்வழுதி கொண்டுவந்தார்

சென்னை, சன. 12—

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் திரு சி. சுப்பிரமணியம்மீது சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் திரு. இரெ. இளம்வழுதி இன்று ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்பினார்.

இதுபற்றிய தமது கருத்தை நாளை தெரிவிப்பதாக அவைத் தலைவர் திரு. ஆதித்தனார் அறிவித்திருக்கிறார்.

திண்டுக்கல் நகர காங்கிரசுக் கட்சியின் 11-வது ஆண்டு மாநாட்டைத் திறந்துவைத்து திரு சி. சுப்பிரமணியம் பேசியபோது, தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மொழித் தீர்மானம்பற்றிக் குறிப்பிடுகையில், 'அண்மையில் சட்டமன்றம் நிறைவேற்றிய மொழித் தீர்மானம் பெரிய அரசியல் மோசடி' ('The Biggest Political Fraud') என்று கூறியதாக 'இந்து' இதழில் வெளியாகியிருக்கும் செய்தி, சட்டமன்றத்தின் உரிமையைப் பாதிப்பதாக திரு. இளம்வழுதி தெரிவித்தார்.

இந்த உரிமைப் பிரச்சினை குறித்து உரிய நேரத்தில் தம்மிடம் அறிவிப்புக் கொடுக்கப்படாததால், இதுபற்றி நன்கு ஆராய்ந்து பார்க்கத் தமக்கு நேரமில்லை என்றும், இதில் உரிமை பாதிப்பு இருக்கிறதா என்பதைப் பார்தது நாளை தமது கருத்தைத் தெரிவிப்பதாகவும் அவைத் தலைவர் திரு ஆதித்தனார் கூறினார்.

### காங்கிரசு ஆட்சிக் காலத்தில் தமிழகப் பள்ளிகளில் வைக்கப்பட்ட பாட நூல்:

# சிலப்பதிகாரத்தை இழிவுபடுத்தும் இந்திப் புத்தகம்

## பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடிகாரனாக வர்ணித்து எழுதப்பட்டிருந்தது உண்மை

### சட்டமன்றத்தில் ஏ. ஜி. பாலகிருஷ்ணன் கேள்வி— அமைச்சர் வெளியிட்ட தகவல்

சென்னை, பிப். 12

"1965—66-ம் ஆண்டுக்குரிய எஸ். எஸ். எல். சி. இந்திப் பாட நூலில் (குல்தஸ்தா), சிலப்பதிகாரத்தை ஓரங்க நாடகமாக எழுதி—அதில் பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடிகாரனாகவும், பாண்டிமாதேவியின் இரண்டு சிலம்புகளுமே களவு போனதாகவும் குறிப்பிட்டு, சிலப்பதிகாரத்தின் சிறப்பையே மாற்றியிருப்பது உண்மையா? 'ஆம்' எனில், அதன் காரணம் என்ன?"

என்று, இன்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் ஏ. ஜி. பாலகிருஷ்ணன் கேட்டார்.

இதற்கு விடையளித்த கல்வித் துறையமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சிலப்பதிகாரத்தையே மாற்றி இழிவுபடுத்தும் வகையில் எழுதப்பட்டிருப்பது உண்மைதான் என்றும், ஆனால் அந்தப் புத்தகம் இப்போது பாட நூலாக இல்லையென்றும் தெரிவித்தார்.

ஏ. ஜி. பாலகிருஷ்ணன்:—"அந்தப் புத்தகம் இப்போது நமது பள்ளிகளில் பாட நூலாக இல்லை என்றாலும், வேறு மாநிலங்களில் பள்ளி மாணவர்களுக்குப் பாட நூலாக வைக்கப்பட்டிருக்கக்கூடும்; அவர்களெல்லாம் இந்தத் தவறான கருத்தையே கொண்டுவிடுவார்களாகையால், அந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியருக்கே இந்தத் தவற்றினை உணர்த்தி, திருத்தி வெளியிடுமாறு செய்ய இந்த அரசு ஆவன செய்யுமா?"

அமைச்சர்:— "முன்பு இருந்த அரசினர் இதனைச் செய்தார்களா என்பது தெரியவில்லை; இருப்பினும், அதுபற்றி விசாரித்து, அந்த ஆசிரியருக்கே இதனை உணர்த்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்."

மெய்யப்பன் (சுதந்):— "தமிழ்ப் பண்பாட்டுக்கு எதிராக, பாண்டியனைக் குடிகாரனாகச் சித்தரித்த அந்த நூலாசிரியர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?"

பதில்:— "அந்த ஆசிரியர் வேண்டுமென்றே அப்படித் தவறு செய்திருக்கமாட்டார் என்று நினைக்கிறேன்; அவருக்குத் தவறான தகவல்கள் கிடைத்ததன் அடிப்படையிலேயே இப்படி எழுதியிருக்கக் கூடும்: எனினும் தவறைத் திருத்திக்கொள்ளுமாறு நாம் உணர்த்தலாம்."

### கவர்னர் உரை— ஒரு கண்ணோட்டம்

# பெருமித உணர்ச்சி— இடையறாத நம்பிக்கை!

## ஒளிமிக்க எதிர்காலம்—உருவாகிறது இலட்சியத் தமிழகம்

'கவர்னர்' என்ற பதவி பற்றியும், அப்பதவியை வகிப்பவரின் நிலை பற்றியும் இதுவரையில், 'ஒரு வழி மனப்பான்மை' மட்டும் கொண்டிருந்தவர்களுக்கு, கடந்த சனியன்று தமிழகச் சட்டமன்றம், புதிய விளக்கங்கள்—தெளிவுகள் பல தந்திருக்கிறது.

'கவர்னர்' என்ற சொல், குறிப்பாகக் கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்பும்—அதிலும் சிறப்பாகக் காங்கிரசல்லாத ஆட்சியுடைய மாநிலங்களிலும் கேள்விக் குறியாக இருந்துவருவதற்கு மாறாக, தமிழகம் மட்டும் இப்போது இரண்டாவது முறையாக, வரவேற்கத்தக்க சிந்தனைகளை மாநில—மத்திய அரசியலில தோற்றுவித்திருப்பதனை, துவங்கியிருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் உஜ்ஜல் சிங் ஆற்றியுள்ள பேருரை விளக்கிக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

சடங்கு—மரபு என்ற பழமைப் போக்கில் மட்டுமே பெரும்பாலும் பார்க்கப்பட்டும் பேசப்பட்டும் வந்த கவர்னரின் சட்டமன்றப் பேருரைகள், தமிழகக் கவர்னர்—கழக அரசின் சார்பில்—நேற்று முன் தினம் இரண்டாவது முறையாக ஆற்றியுள்ள உரையின் கருத்துக்கள், 'இந்திய அரசியலில் புதிய சிந்தனையோட்டங்களை விளைவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை' என்ற வகையில் இருக்கிறது!

சொற்களில் சூடு—நடவடிக்கைகளில் படபடப்பு—எண்ணத்தில் கொதிப்பு நிலை—இவை ஏதுமில்லாமலேயே அரசியலில் சனநாயகக் கடமையாற்றி, 'சமுதாய நலத்தினைக் கடைசி மனிதனும் துய்க்கும் வகையில் பணியாற்ற முடியும்' என்ற அமைதிப் புரட்சிக்கு இலக்கணம் வகுக்கும் அறிஞர் அண்ணாவின் கழக அரசு பெற்றுவரும்—இனி பெறப்போகும் பாராட்டுப் பத்திரங்களுக்கு, இந்த முறை கவர்னர் ஆற்றியுள்ள சட்டமன்றப் பேருரையும், காலத்தால் மறக்கவோ மறைக்கவோ முடியாத ஒரு சான்றேடாக நிச்சயம் இருக்கப்போகிறது!

கவர்னர், 'புதுடில்லியின் அரசியல் ஏஜெண்டு' என்ற—சற்றே அருவருக்கத்தக்க ஒரு விமர்சனம் அப்புறப்படுத்தப்பட்டு,

"மாநில மக்களின் ஆசைகளைப் பிரதிபலிக்கக் கூடியவர் கவர்னர்—மாநில அரசின் நடைமுறைத் திட்டங்களுக்காக—நீண்டகாலக் குறிக்கோள்களுக்காக மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி விளக்கவேண்டியவர் கவர்னர்"

என்ற ஒரு நிலை விளக்கத்தினை—கழக அரசின் சார்பில் ஆளுநர் உஜ்ஜல் சிங் ஆற்றியுள்ள உரை, தெளிவாகப் பிறப்பித்துள்ளது!

எல்லா மாநிலங்களிலுமே காங்கிரசுக் கட்சியே நிர்வாகத்தில் இருந்தபோது கிடைக்காத இந்த அரிய சித்தாந்தம்—

1967-க்குப் பின், எதிர்க் கட்சிகளின் ஆட்சி அமைந்திருக்கும் மாநிலங்கள் சிலவற்றின் மூலமும் கிடைக்காத இந்த கருத்தோட்டம்—

இந்திய அரசியலுக்கு, தமிழகத்தின் கழக அரசின் மூலம் கிடைத்திருக்கிறதென்ற உண்மையினை அரசியல்வாதிகள் மறக்கலாம்—அல்லது மறைக்கலாம்; ஆனால் அரசியல் பண்டிதர்கள்—அவர்களினும் மேலாக உள்ள அரசியல் சிந்தனை படைத்த பொதுமக்கள், இனி வரும் நாட்களில் எண்ணி எண்ணி ஆராய்ந்து பாராட்டுவதற்கு இருக்கின்றனர்.

பருவ மழை — பட்ஜெட் — பற்றாக்குறை என்ற வழக்கமான போக்கில் இல்லாமல்,

முதலில், பெரும்பான்மையைக் கொடுத்த மக்களுக்கும்—

அடுத்து, அதனைக் கட்டிக்காக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்—

அதனைவிட மேலாக, ஆட்சி மாற்றத்துக்கிடையிலும் தொடர்ந்து நிர்வாக இயந்திரத்தை நடுநிலை பிறழாது செவ்வனே இயக்கும் அரசு ஊழியர்களுக்கும்

தரப்பட்டிருக்கும் பாராட்டும் நன்றியும், பேருரையின் பொருத்தமான முன்னுரையாக அமைந்துள்ளது.

"கலாச்சாரப் பெருமை, பண்பாட்டுச் சிறப்பு ஆகியவற்றினை உள்ளடக்கிய தமிழின் மாட்சியினை, சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டின் பெருமைகளின் மூலமாகவாவது பிற மொழியாளர்கள் உணர்ந்திருக்கக்கூடும் — உணர்ந்திருக்க வேண்டும்" என்ற 'மென்மையான கவன மூட்டலை', ஆளுநர் உஜ்ஜல் சிங் தந்திருப்பது, அடுத்துக் கூறியிருக்கும்

### மொழி உரிமை

என்ற கோட்பாட்டுக்கான முன்னுரை போன்று அமைந்திருக்கிறது.

"சிறப்புடையதோ இல்லையோ—'மொழி என்பது மக்களின் உள்ளத்தினை ஈர்க்கவல்லது' என்ற உண்மை அனைவராலும் ஏற்கப்பட்டிருக்கிறது"

என்பதனைச் சுட்டிக்காட்டியிருக்கும் ஆளுநர் உஜ்ஜல் சிங்,

"அருமை பெருமைகளுக்கு உரிய தமிழின் சிறப்பினை இந்தியக் குடியரசின் தலைவரும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் நேர்முகமாக உணர்ந்தார்"

என்பதனை உரையில் நினைவுபடுத்தியிருப்பது, வெறும் சம்பவச் சேர்க்கை மட்டுமல்ல!

அத்தனைச் சிறப்புக்குடைய தமிழுக்குரியவர்கள், தங்கள் மொழிக்குரிய மதிப்பும் உரிமையும், 'அரசியல் அடிப்படையிலும் கிடைக்க வேண்டும்' என எண்ணுவதும் எதிர்பார்ப்பதும், அதற்காகப் பாடுபடுவதும், 'நியாயம்' என்ற

### அரசியல் நுண்ணறிவு,

'இருக்கவேண்டியவர்களுக்கு இருக்கவேண்டும்' என்று இடித்துக் காட்டியிருப்பது, மறுத்துரைக்க முடியாத வாதமாகும்.

'ஆட்சிமொழி' என்பது, ஒரு மொழிப் பிரச்சினை மட்டுமல்ல—'கூட்டாட்சித் தத்துவத்தினைச் சரிவரப் புரிந்துகொண்டு நடக்காத தவறினால் விளைந்த கேடு' என்ற அரிய படப்பிடிப்பும் ஆளுநர் உரையில் பொதிந்து கிடப்பதனை, அரசியல் பார்வையாளர்கள் மட்டுமல்ல—புதுடில்லியில் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களும் உணருவது அவசியம்.

"பல்வேறு பண்பாடு—வாழ்க்கை முறை ஆகியவற்றைக் கொண்ட கூட்டாட்சியில், அவரவர் உணர்வுகளுக்கு உரிய இடமும் மதிப்பும் அளிக்கப்படாவிட்டால் கூட்டாட்சி முறை கேலிக்குரியதாக மட்டுமல்ல—ஆபத்திலும் கொண்டுவிடக் கூடும்" என்ற எச்சரிக்கையும் இருப்பதனை, 'அனைத்திந்தியா'வினைச் சொல்லில் மட்டும் உருவாக்கிக்கொண்டிருக்கும் முதற் பெரும் கட்சியினரான காங்கிரசார் உணருவது அவசியம்.

"கழக அரசின் சார்பாகத் தரப்படும் கவர்னர் உரைதானே? வேறு எதனைப் பொதுவாக எதிர்பார்க்க முடியும்?" என்று அவசரப்பட்டுக் கூறுபவர்களின் வினவுக்கும் இடமளிக்கவில்லை ஆளுநர் உரை!

அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவாக உள்ள

மத்திய—மாநில உறவு
வரி வசூல்
நிதி ஒதுக்கீடு
திட்ட நிர்ணயங்கள்

ஆகிய பொருளாதாரப் பிரச்கினைகள்பற்றி மட்டுமல்ல—அதற்கான மார்க்கங்களும் காட்டப்பட்டிருக்கிறது கவர்னரது உரையில்!

புதிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, 'நிதி ஆணைக் குழு' பற்றி மறு பரிசீலனை செய்வதும்—

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1999 தை 29 (12—2—68) திங்கள்

# வன்முறை நிகழ்ச்சிகள்--- வேதனையும் வேண்டுகோளும்!

கோவையில் கடந்த வியாழக்கிழமையன்று நடைபெற்றிருக்கின்ற வன்முறை நிகழ்ச்சிகள் 'வருந்தத்தக்கது' என்பதுடன், வன்மையான கண்டனத்துக்கும் உரியதாகும்.

திறந்த காரில் வந்த மத்திய அரசாங்கத் துணையமைச்சர் இராமசாமி அவர்கள் கல்லடிக்கு உள்ளாகியிருக்கின்றார்; தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் கலந்து கொண்ட காங்கிரசுக் கூட்டத்திலும் குழப்பம் நடைபெற்றிருக்கிறது. குழப்பத்தின் காரணமாகக் கூட்டம் நடைபெறுவது தடைபட்டுப் போயிருக்கிறது.

இந்த இரண்டு வன்முறைச் செயல்களுக்கும் யார் காரணமாக இருந்திட்டாலும், அவர்கள் கண்டிக்கத்தக்கவர்களே ஆவர்.

ஒழுங்கான சனநாயக வளர்ச்சிக்கு, 'வன்முறைச் செயல்கள் ஊறு தேடக்கூடியன' என்பதைச் சொல்லத் தேவையில்லை.

சனநாயக ஆட்சி முறையில், அவரவர் கொண்டிருக்கின்ற கருத்துக்களை வெளியிட ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. குறிப்பிட்ட ஒரு பொருளில் ஒருவர் வைத்திருக்கின்ற கொள்கைக்கு முரணாக வேறு ஒரு கருத்தினை மற்றொருவர் கொண்டிருக்கின்றார் என்பதற்காகத் தனித்த முறையில் அவரை வெறுப்பதோ, தாக்கத் துணிவதோ அரசியல் அறமாகாது என்பது மட்டுமல்ல—சனநாயகப் பண்பும் ஆகாது.

ஒருவர் கொண்டுள்ள கருத்துக்கு மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கின்ற காரணத்துக்காக அவரை அச்சுறுத்தி, அக்கருத்தை வெளியிட முடியாமல் செய்துவிட மேற்கொள்ளும் முயற்சி வெறுக்கத்தக்கதாகும். அம்முயற்சியினால், அம்மாறுபட்ட கருத்து மறைந்தொழிந்தும்விடாது.

ஒருவர் கொண்டுள்ள கொள்கைக்கும் மற்றொருவர் கொண்டுள்ள கொள்கைக்கும்தான் மோதுதல் இருந்திடவேண்டும். மாறுபட்ட கருத்துக்காக மண்டைகளை உடைத்துக்கொள்வது அறநெறி ஆகாது; அது, காட்டுச் செயலாகும்.

கோவையில் நிகழ்ந்திருக்கின்ற விரும்பத்தகாத வன்முறைச் செயல்கள் குறித்துத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், தமது மனவேதனையைப் பின்வருமாறு வெளியிட்டிருக்கின்றார்கள் :—

**"வியாழக்கிழமை இரவு கோவையில் நடந்த சம்பவங்கள் எனக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் அளித்தன.**

**"குறிப்பாக, மத்தியத் துணையமைச்சர்மீது கல் விழுந்தது என்றும், த. நா. கா. கமிட்டித் தலைவர் வ. உ. சி. பூங்காவில் பேசிய கூட்டத்தில் கல்வீச்சு நடந்தது என்றும் கேள்விப்பட்டு மிகவும் வருந்தினேன்.**

**"இம்மாதிரிச் சம்பவங்கள் எனக்கு சொல்லொணாத் துயரை அளிக்கின்றன. இதனால் சனநாயகத்தின் எதிர்காலத்தைப் பற்றியேகூட நான் நம்பிக்கை இழக்க ஆரம்பித்துவிடுகிறேன்.**

**"அமைதியைக் குலைப்பதில் கொண்டுபோய் விடும் ஆர்ப்பாட்டங்களைக் கைவிட்டு, பிரச்சினைகளை நிதானமாக விவாதிக்க வேண்டுமென்றே நான் வற்புறுத்திக் கேட்டு வந்திருக்கிறேன்; இன்னமும் கேட்டுக்கொண்டிருக்கின்றேன்.**

**"மொழிப் பிரச்சினை உள்பட எந்தப் பிரச்சினையிலும் எந்த விதமான கருத்துக்கள் கொண்டிருந்தாலும், அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இம்மாநிலத்தின் குடிமக்களாக நாம் வாழவேண்டும். துவேஷ உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவது நமக்கு உதவி செய்யப்போவதில்லை."**

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டிருக்கின்ற மேற்கண்ட கருத்தை, மாணவர்கள் உட்பட அனைவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான், கோவை சம்பவத்தால் முதலமைச்சரின் உள்ளத்தில் மூண்டிருக்கின்ற வேதனையின் தன்மையையும் அளவையும் அனைவராலும் புரிந்துகொள்ள முடியும்.

கோவையில் நடைபெற்றிருக்கின்ற வன்முறைச் செயல்களைக் குறிப்பிட்டிருக்கின்ற தமிழகக் காங்கிரசுக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம், 'கோவைக்கு வந்தவுடன், கோவைப் பொதுக்கூட்டத்தைத் தடுக்க மாணவர்களை, தி. மு. க.-வினர் சுறுசுறுப்பாகத் தயார்படுத்திவருவதாகக் கேள்விப்பட்டேன்' எனச் செய்தியாளர்களிடம் அறிவித்திருக்கின்றார்.

மேற்படி செய்தியை அவர், 'கேள்விப்பட்டேன்' என்றுதான் சொல்லியிருக்கின்றாரே அல்லாது, அந்தச் செய்தியைத் தாம் நம்புவதாகத் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை.

தாமே, 'உண்மையானது' என உறுதியாக நம்பாத ஒரு செய்தியை, காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம், செய்தியாளர்களிடம் அறிவிக்காமலிருந்திருந்தால் எவ்வளவோ நலமாக இருந்திருக்கும். நியாயமான காரணம் இருக்கின்றதோ இல்லையோ–மொழிப் பிரச்சினை விஷயமாக சுப்பிரமணியம் அவர்களிடம், மாணவர்களுக்கு அவநம்பிக்கையும் கசப்புணர்ச்சியும் இருந்துவருகிறது; இந்த உண்மையை அவரும் அறிவார்.

மொழிப் பிரச்சினையைப் பொறுத்து அவர்மீது மாணவர்களுக்கு இருந்துவரக்கூடிய அவநம்பிக்கை--கசப்புணர்ச்சி ஆகியவற்றின் விளைவாக, மாணவர்களிடை கொந்தளிப்பும் பதட்ட உணர்ச்சியும் இருந்துவருகிறது. இந்தச் சூழ்நிலையில், மாணவர்களையும்--தி. மு. கழகத்தவரையும் சுப்பிரமணியம் குறிப்பிட்டிருக்கத் தேவையில்லை.

மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மாணவர்கள் இனி எத்தகைய கிளர்ச்சியையும் மேற்கொள்ளத் தேவையே இல்லை; இந்தித் திணிப்பில் தங்கள் நிலை என்ன என்பதை ஏற்கனவே தமிழக மாணவர்கள் ஐயத்திற்கிடமின்றி அறிவித்துவிட்டனர்; அவர்களுடைய கருத்தை நன்கு உணர்ந்துகொண்ட தமிழக அரசும், இந்தி மொழிபற்றி இறுதியான முடிவை மேற்கொண்டுவிட்டிருக்கிறது.

இதற்குப் பிறகும் மாணவர்கள் கிளர்ச்சி மேற்கொள்ளுவது தேவையற்றதாகும்; 'கறுப்புக் கொடி நிகழ்ச்சி தேவைதானா' என்பதை மாணவர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இவ்வாறு ஆராயும்பட்சத்தில், 'அதுவும் தேவையில்லாத ஒன்று' என்ற முடிவுக்கே மாணவர்கள் வருவர் என்பதில் ஐயமில்லை.

நாட்டில் ஒழுங்கையும்--அமைதியையும் பாதுகாத்து வரவேண்டிய கடமை முதியவர்களை மட்டுமே பொறுத்திருப்பதல்ல; அக்கடமையில் மாணவர்களுக்கும் பங்கு இருக்கிறது.

அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாத்து வருவதில் சிறப்பெய்தி இருப்பது தமிழகம்; அந்த நற்பெயரைப் பாதுகாக்கும் பொறுப்பு, மாணவர்கள் உட்பட அனைவருக்கும் உண்டு. இதை மனத்தில் பதியவைத்துக் கொண்டு, மொழிப் பிரச்சினையில் தமிழக அரசு எடுத்திருக்கின்ற முடிவுக்கு வலிவூட்டும்வகையில், அமைதியும் ஒழுங்கும் பாதுகாக்கப்படுவதற்கு மாணவர்களும், மற்றவர்களும் செயல்பட்டு வரவேண்டும் என்பதே நமது கோரிக்கை.

—கா. க.

# ஒளிமிக்க எதிர்காலம் காத்திருக்கிறது

# பெற்றிருக்கும் பெருமையைப் பேணிக் காத்திடுவோம்

## இலட்சிய மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கிடுவோம்

### சட்டமன்றத்தில் ஆளுநர் உஜ்ஜல் சிங் பெருமிதம்

" தமிழக மக்களுக்கு—இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும்—ஒளிமிக்க எதிர்காலம் அவர்களை எதிர்நோக்கி நிற்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

" எல்லாத் துறைகளிலும் சீரான முன்னேற்றம் காண அமைதியான சூழலும், கட்டுப்பாடான போக்கும், கடினமான உழைப்பும் இன்றியமையாதன என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர் என்பதில் எனக்கு ஐயப்பாடில்லை.

" பெருமைக்குரிய இம்மாநில மக்களனைவரும்—எச்சமயத்தினராயினும், எச்சாதியினராயினும், எம்மொழியினராயினும்—நலமுடன் முன்னேறுவதற்கு வழிவகுக்கும் முறையில், நல்லதொரு சூழ்நிலையைப் பேணி வளர்ப்பதே நமது முயற்சியாக இருத்தல் வேண்டும்.

" இம்மாமன்றம், தனது விவாதங்களைக் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடத்துமெனப் பெற்ற புகழுக்கேற்ப, இவ்வமயமும் அமையுமென்ற நம்பிக்கையுடன் உங்கள் விவாதங்களைக் கூர்ந்து கவனிப்பேன்.

" நாம் அனைவரும்—எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருப்பினும்—வள்ளுவப் பெருந்தகை இயம்பியுள்ளது போன்று, பசியும் பிணியும் பகையும் அற்ற ஓர் இலட்சிய மாநிலமாக நமது மாநிலத்தை உருவாக்க வேண்டுமென்பதுதான் நாம் அனைவருடைய குறிக்கோளாகும் "

இவ்வாறு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், பிப். 10-ம் நாளன்று சட்டப் பேரவைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார். இத்தொடர்பில் அவர், மாநிலத்தின் பல்வேறு பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டார்; தனித்தனி தலைப்புகளில் அவை இங்கு தரப்படுகின்றன :—

சென்ற ஆண்டில் நம் நாட்டின் பற்பல பகுதிகளில் நிலவிய அரசியல் கொந்தளிப்புக்கும் நிலையற்ற தன்மைக்கும் மாறாக, நமது மாநிலத்தில் நல்ல—திறமைமிக்க நிர்வாக இயந்திரத்தின் துணைகொண்டு, நிலையான—இணக்கமான ஆட்சியின் நலன்களை நம்மால் துய்க்க முடிந்தது; எனவே, இருகாறும் நீங்கள் ஆற்றியுள்ள பணிக்காக உங்களைப் பாராட்டுவதோடு, நிலையான ஆட்சியின் பயனைப் பெற்ற மகிழ்ச்சியிலும் உங்களுடன் பங்குகொள்ள விழைகிறேன்.

ஆட்சிப் பொறுப்பு, ஓர் அரசியல் கட்சியின் கையிலிருந்து பிறிதோர் கட்சிக்கு மாற்றப்பட்டதனால் தோன்றிய புதிய சூழ்நிலைக்கிணங்க, பற்பல பிரிவுகளைச் சேர்ந்த அரசாங்கப் பணியாளர்களின் அரசியல் நடுநிலைமையினையும், தொழில்முறைத் திறனையும் மெய்ப்பித்துக் காட்டுகிறது; நமது மாநிலத்தில் மக்கள் ஆட்சி முறை வெற்றி அடையுமென்பதற்கு, இது நல்லதோர் அறிகுறியாகும் என்பதில் ஐயமில்லை.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பு தொட்டே, வளமார் பண்பாடும் உயர் நாகரிகமும் மலிந்த ஒரு நாட்டில் இத்தகைய வெற்றியினை நாம் எதிர்பார்த்தல் இயல்பானதே.

## குன்றின் மேலிட்ட விளக்காக உலகத் தமிழ் மாநாடு

என்றுமே கண்டிராத மக்களின் உற்சாகத்திற்கும் ஈடுபாட்டிற்கும் இடையே நம் பெருமதிப்பிற்குரிய குடியாட்சித் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களால் துவக்கிவைக்கப்பட்ட இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தமிழ்நாட்டின் பண்டைப் பெருமையின் மாட்சியைத் தமிழகத்தின் கண்முன்னே எடுத்துக்காட்டிற்று.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்துவந்த நுண்ணறிவாளர்களும், புலவர் பெருமக்களும் பங்குகொண்ட இம்மாநாடு, 'நமது தமிழ் மொழி, காலத்திற்கிணங்கப் புத்தம்புதிய கலைகளைத் தெற்றென விளக்கும் திறனும் வளனும் வன்மையும் வாய்ந்த விழுமிய மொழி' என்பதை எடுத்துக்காட்டியுள்ளது.

கவிதை—தத்துவம்—கலைச் சிற்பம் போன்ற பற்பல துறைகளில் தமிழ்கூறும் நல்லுலகம் எய்தியுள்ள சாதனைகள், இம்மாநாட்டிற்குத் தொடர்பான பற்பல விழாக்களிலே குன்றின் மேலிட்ட விளக்கேபோல் குவலயத்தார்க்கெல்லாம் எடுத்துக் காட்டப்பெற்றன!

சென்ற காலத்தைச் சிந்தை செய்யும்போது உண்மையான ஒரு பெருமித உணர்ச்சியையும், வருங்காலத்தை எண்ணும் போது இடையறாத ஒரு நம்பிக்கையையும், இன்றைய இன்னல்களுக்கு இடையிலும் தமிழர்களின் உள்ளத்திலே இவ்விழாவின் நிகழ்ச்சிகள் ஏற்றிவைத்திருக்குமென்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

## நெசவாலைக்கு நேர்ந்த நெருக்கடி

மூன்றும் திட்டக் காலத்தில் வேளாண்மை உற்பத்தி குன்றியது, தொழில் துறையிலும் உற்பத்தி வேகம் குறைந்ததற்கான முக்கியக் காரணங்களில் ஒன்றாகும் என்பதை இப்பேரவையினருக்கு நினைவுறுத்த விரும்புகின்றேன்.

விலைவாசிகளின் ஏற்றமும், அதன் காரணமாக மக்களின் வாங்கும் திறன்குறைந்தமையும் தொழில் துறைப் பொருள்களின் தேவை அளவு பெரிதும் சரிவதற்கு ஏதுவாய் இருந்தன; இவற்றால், பல்வேறு தொழில் துறையில் மந்த நிலை ஏற்பட்டது.

கடந்த இரண்டாண்டுகளில் வளர்ச்சித் திட்ட முதலீடுகள் பெரும் அளவில் குறைக்கப்பட்டதால், நிலைமை மேலும் சீர்கேடுற்றது. குறிப்பாக, இம்மாநிலத்தில் நெசவாலைத் தொழில் மிக இடருற்ற நிலைக்கு வந்தது.

கடந்த மார்ச் திங்களில் இந்த அரசு பதவியேற்றபோது சில நெசவாலைகள் மூடிக் கிடந்தன; மேலும் பல நெசவாலைகள் மூடும் தறுவாயிலிருந்தன.

பெருந்தொழில்களை முறைப்படுத்தி வளரச்செய்யும் பொறுப்பு முக்கியமாய் மத்திய அரசினைச் சேர்ந்ததாயிருப்பினும், இந்த ஆலைகளின் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மத்திய அரசு திட்டவட்டமான செயற்குறிப்புகள் எதையும் அளிக்க முன்வரவில்லையென்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

'நொடித்துவிட்ட ஆலைகளின்' சிக்கலை ஆய்வதற்கு மாநில அரசு தானே நடவடிக்கை எடுத்துக்கொண்டு, டாக்டர் லோகநாதன் அவர்கள் தலைமையில் வல்லுநர்க் குழு ஒன்றை அமைத்ததன் மூலம் உரிய சாலத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டது; அவ்வல்லுநர்க் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசு திட்டமொன்றினைத் தீட்டியது; இத்திட்டத்தின்படி, மாநில அரசு அளிக்கும் உத்தரவாதங்களின் அடிப்படையில் வங்கிகள் வழங்கிய கூடுதல் நிதி வசதியைக் கொண்டு இந்த ஆலைகள் மீண்டும் செயல்பட முடிந்தது.

இந்தத் திட்டத்தின்கீழ் மாநில அரசாங்கம், 18 ஆலைகளைப் பொறுத்தவரை உத்தரவாதங்கள் அளிக்கப்பட்டிராவிட்டால் இந்த ஆலைகள் மூடப்பட்டு ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழந்திருப்பார்கள்.

தொழில்துறையில் ஏற்பட்டுள்ள மந்தநிலை, பல தொழிற்சாலைகளில் நிர்வாகத்தினருக்கும்—தொழிலாளர்களுக்குமிடையே மனக்கசப்பு உண்டாவதற்குக் காரணமாய் இருந்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

# 3,000 எஞ்சினீயர்கள் ஆட்குறைப்பு!

## மறுவாழ்வுபற்றிய பரிசீலனையில் மத்திய அமைச்சர் யோசனை

விசயவாடா, பிப். 10—

ஆந்திராவில் அரசு ஊழியத் துறையில் மட்டும் கடந்த சனவரித் திங்கள் இறுவரையில் 3,000 எஞ்சினீயர்கள் ஆட்குறைப்பு செய்யப்பட்டுள்ளனர்!

இதுவுமன்றி, எஞ்சினீயரிங் கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெற்ற 7,500 பேர் வேலையில்லாமல் உள்ளனர்!

எஞ்சினியர்கள் கழகம் அளித்துள்ள அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆந்திராவில் உள்ள எஞ்சினீயரிங் நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள்—பிரதிநிதிகள் கூட்டம் நடந்தபோது ஆட்குறைப்பு செய்யப்பட்ட எஞ்சினீயர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது; இக்கூட்டத்தில் கலந்துகொண்ட மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் யோசனை தெரிவித்ததாவது:—

"பாசன வசதிகளுடன் சாகுபடிக்கு இலாயக்குள்ள தரிசு நிலங்களை அவர்களுக்குத் தரவேண்டும்; திட்டங்களுக்கான காண்டிராக்டுகளை அவர்களுக்கு விடவேண்டும்; வட்டியில்லாத கடன் உதவி அளிக்க வேண்டும்.

"மேலும், நிலைமை சீரடையும் வரையில் எஞ்சினீயரிங் கல்லூரிகளில் சீட்டுகள் எண்ணிக்கையை 50 சதவிகிதம் குறைக்கலாம்."

# மாவட்டங்களுக்கு அரிசி, நெல் அனுப்ப விரிவான திட்டம்

## அதிகாரி தரும் தகவல்

திருச்சி, பிப். 10—

சென்னை நகரில் அரிசிக் கையிருப்பை அதிகரிப்பதற்காகத் தமிழக அரசின் வேண்டுகோளுக்கிணங்க தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து அரிசியுடன் மூன்று தனி இரயில்கள் துரிதமாக அனுப்பப்படுகின்றன.

இந்தத் தகவலைத் தெரிவித்த தென்பகுதி இரயில்வேயின் திருச்சி டிவிஷனல சூப்பிரண்டெண்டு சி.வி.பி. மேனன், 'திருச்சி டிவிஷனிலிருந்து இரயிலில் சம்பா நெல் அனுப்பும் வேலை துவங்கிவிட்டது' என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தப் பருவத்தில் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து மட்டும் ஒன்றரை இலட்சம் டன் நெல—அரிசி இரயிலில் அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"சென்னை நகருக்கும் இதர மாவட்டங்களுக்கும் பெரும் அளவில் நெல், அரிசியை அனுப்புவதற்கான விரிவான திட்டம் ஒன்றுபற்றித் தஞ்சை கலெக்டருடனும், சென்னை சிவில் சப்ளை கமிஷனருடனும் ஆலோசனை கலந்து உருவாக்கப்படுகிறது."

திருச்சி மாவட்ட டெல்டா பகுதிகளில் சம்பா அறுவடை ஆரம்பமாகிவிட்டது; இன்னும் பத்து நாட்களில் அறுவடை மும்முரமாக நடைபெறும்.

# ஆளுநர் கூறிய திருக்குறள்!

தமிழகச் சட்டமன்றத்தில் உரையாற்றிய ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், தமது உரையை, திருக்குறட்பா ஒன்றைக் கூறி முடித்தார்.

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராதியல்வது நாடு"

என்ற குறட்பாவைச் சொல்லி முடித்தார்.

# கோடிக்கணக்கான மக்கள் வறுமையில் வாடுகின்றனர்!

## இருபதாண்டுச் சுதந்தரத்துக்குப் பின்னரும் நிச்சயமற்ற நிலைமையே நீடிக்கிறது

### உண்மையை அறிந்து உதவுமாறு கோரிக்கை — முற்போக்கு நாடுகளுக்கு உலக பாங்கியின் தலைவர் அறிவுரை

புதுடில்லி, பிப். 10—

"உலக மக்கள் தொகையில் ஏழில் ஒரு பகுதி மக்கள் இந்தியாவில் வசிக்கின்றனர்; இந்தியாவுக்குச் சுதந்தரம் கிடைத்து 20 ஆண்டுகளுக்கும் அதிகமாகிவிட்டது; எனினும், அதன் கோடிக்கணக்கான மக்கள் வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றனர்.

"இந்தியாவின் தேசிய வாழ்வில் இன்னும் நிச்சயமற்ற நிலைமையே நீடித்துவருகிறது; இதே நிலைமை இந்தியாவுக்கு மாத்திரமன்னியில் வேறு சில நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது"

என்று, உலக பாங்கித் தலைவர் ஜார்ஜ் உட்ஸ், ஐக்கிய நாட்டு இரண்டாவது வர்த்தக—வளர்ச்சி மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார். இத்துறையில் முற்போக்கு நாடுகளுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் அவர் சுட்டிக்காட்டியதாவது:—

"ஏழை நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு முற்போக்கு நாடுகள் முதலிடம் கொடுத்து திறமையாகவும் தீவிரமாகவும் ஒன்றுபட்டு உதவி புரியவேண்டும்; இன்றேல் மிகவும் அபாயகரமான அரசியல் பொருளாதார விளைவுகள் ஏற்பட்டுவிடும். அவற்றைத் தவிர்ப்பதற்கு முற்போக்கு நாடுகள் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

"இந்த உண்மையை அறிந்து, அதற்குத் தகுந்தவாறு பின்தங்கிய நாடுகளுக்குத் தற்போது முற்போக்கு நாடுகள் உதவி அளித்துவருவதாகத் தெரியவில்லை!"



# கவர்னர் உரை--ஒரு கண்ணேட்டம் (முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

மத்திய—மாநில அரசுகளின் அதிகார வரம்புகள் பற்றி மறு சிந்தனை செய்வதும்—

எங்கு -- எந்தக் கட்சிகள் நிர்வாகத்திலிருப்பினும் சுமூகமான இயக்கத்தினை நாடு முழுவதிலும் ஏற்படுத்தித் தரும் என்ற பரந்த விளக்கத்தினை மத்திய அரசோ, அல்லது தமிழகத்துக் காங்கிரசுக் காரர்களோ தவருகச் சிந்திக்காமலிருந்தார்களானல், உண்மையில் பாராட்டப்படுவர்!

தொழில் துறைத் தேக்கம்—வாழ்க்கைப் பொருள்களின் விலையேற்றம் ஆகிய இரு பெரும் பிரச்சினைகள் பற்றி, 'திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபின்னர்தான் மத்திய அரசினைக் குறை கூறுகிறது' என்று எவரும் குறுக்கு வழியில் விமர்சனம் செய்துவிடத் தேவையில்லை; ஏனெனில், 'நாட்டு வாட்டம் போக்கிட (மத்திய அரசு) நோட்டு அச்சடித்தால் போதாது' என்ற தேர்தல் முழக்கத்தினை 1957-ம் ஆண்டே தந்திருக்கிறது கழகம்!

அதனை மேலும் உறுதிப்படுத்துகின்ற வகையில் தான், விலைவாசி உயர்வால் தொழில் துறையில் மந்தம்—விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசும் பொறுப்பு—என்று ஆளுநர், தமது பேருரையில் எடுத்துக்காட்டியிருக்கிருர்!

மாநில அரசு மட்டும் தனித்து நின்று எடுக்கும் முயற்சிகள், விலைவாசி உயர்வைத் தடுத்துநிறுத்த முடியாது—என்ற அடிப்படை நிலையினை ஆளுநர் உணர்த்தியிருப்பது, அவரது உரைமீது விவாதத்தில் இறங்க இருக்கும் தமிழகத்து எதிர்க்கட்சியினருக்குத் தரப்பட்டுள்ள எச்சரிக்கை கலந்த ஓர் உண்மையாகும்.

பெருமித உணர்ச்சியும் இடையருத நம்பிக்கையும் கொண்ட இலட்சிய மாநிலமாகத் தமிழகத்தைக் கவர்னர் தமது உரையில் காட்டியிருக்கிருர்!

**அந்த ஒளிமிக்க எதிர்காலத்துக்கு, கழக அரசு இம்மாநிலத்தினை வழி நடத்திச் செல்வதற்கு இனி வரும் நாட்கள் பயனுள்ளவையாக அமையட்டும்!**

—எஸ். ஆர்.

# மொழிப் பிரச்சினையில் இந்திராவின் பிடிவாதம் தளர்கிறது

## நாடாளுமன்றத் தீர்மானத்தைத் திருத்த மூலவர்கள் முயற்சி

### தமிழகக் கவர்னர் உரை--டில்லியின் எதிரொலி

புதுடில்லி, பிப். 11—

மொழிப் பிரச்சினை குறித்து அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா, இன்று தலைமையமைச்சர் இந்திரா காந்தியுடன் நெடுநேரம் விவாதித்தார்.

இந்தி பேசாத பகுதி மக்களுக்கு மனநிறைவூட்டும் வகையில் அரசு தக்க முடிவினை மேற்கொள்ள வேண்டும் என்று தாம் தலைமையமைச்சரிடம் கூறியதாகவும், அதற்குத் தலைமையமைச்சரும் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் நிஜலிங்கப்பா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மொழிப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்ககாக, முதலமைச்சர்கள் மாநாடொன்றினைக் கூட்டுமாறும் திரு. நிஜலிங்கப்பா, தலைமையமைச்சருக்கு யோசனை தெரிவித்திருக்கிருராம்.

"நாடாளுமன்றத்தில் மொழிச் சட்டத் திருத்தத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் திருத்தவேண்டிய அவசியம் உணரப்படுமானல் திருத்தவும் வேண்டும்; அந்தத் தீர்மானம், மக்கள் மனத்தில் ஏராளமான ஐயப்பாடுகளை உருவாக்கியுள்ளது; அந்த ஐயப்பாடுகளை நீக்கியாக வேண்டும்" என்றும் அவர் கூறினர்.

### தமிழக கவர்னர் உரை

இன்று கூடிய நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில், 'தமிழைத் தொடர்பு மொழியாக்க வேண்டும்' என்று தமிழகக் கவர்னர் தமது உரையில் குறிப்பிட்டிருப்பது எடுத்துக் காட்டப்பட்டது.

உறுப்பினர்கள் கவர்னரின் உரையைச் சுட்டிக்காட்டி, 'மொழிச் சிக்கலைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது' என்று தலைமையமைச்சரைக் கேட்டனர்.

தலைமையமைச்சர் இந்திரா இதற்குப் பதிலளிக்கையில், இந்தப் பிரச்சினையில் ஒவ்வொருவரும் மனநிறைவு கொள்ளும்வகையில், எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன' என்றுர்.

['நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத் திருத்தத்தையோ, தீர்மானத்தையோ, இனித் திருத்துவதற்கில்லை' என்று முன்பு திட்டவட்டமாகக் கூறிய இந்திரா காந்தி இப்போது, 'திருத்தியே தீரவேண்டும்' என்ற கட்டாயத்துக்கு வந்திருக்கிருர் என்பது நிஜலிங்கப்பாவின் கூற்றிலிருந்து தெரியவருகிறது.]

## ஜனசங்கத் தலைவர் கொலையுண்டார்

### நாடெங்கும் இரங்கல்

அனைத்திந்திய ஜனசங்கத் தலைவர் தீனதயாள் உபாத்யாயா கொலையுண்டதாகவும், அவரது சடலம், மொகல் சராய் என்ற இரயில் நிலையத்திற்கு அருகேயுள்ள தண்டவாளத்தின்மீது காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேம்.

அவரது மரணம் பற்றி உடனடியாக விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

அவரது மரணம் குறித்து இந்தியக் குடியரசுத் தலைவர்—துணைக் குடியரசுத் தலைவர்—தலைமையமைச்சர்—மற்றும் அமைச்சர்கள்—மற்றும் தலைவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

## இந்திக்கு எதிர்ப்பு

### கிளர்ச்சியை நீடிக்க மைசூர்-ஆந்திர மாணவர்முடிவு

மைசூர், ஆந்திரம் ஆகிய மாநில மாணவர்கள், இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தைக் கால வரையறையின்றி நீடிப்பதென முடிவு செய்திருக்கின்றனர்.

விளம்பரம்

**ரூ. 275 இலட்சத்திற்கான 6 சதவிகித தமிழ்நாடு மின்கழகக் கடன்--1980**

[வட்டி தருவதற்கும் முதலைத் திருப்பித் தருவதற்கும் தமிழக அரசால் உறுதியளிக்கப்பட்டுள்ளது]

இந்தியப் பொறுப்புறுதிச் சட்டப்படி, கடன் ஈட்டுப் பத்திரங்கள், டிரஸ்டி பாதுகாப்புப் பத்திரங்களாக இருக்கும்; மேலும், இன்சூரன்சுச் சட்டம், பாங்கிங் கம்பெனிகள் சட்ட நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட கடன் ஈட்டுப் பத்திரங்களாகவும் இருக்கும்.

1934 இந்திய ரிசர்வ் பாங்கிச் சட்டம் 17-(4)-(a) பிரிவின்கீழ் இந்தப் பத்திரங்கள் முன்பண நோக்கங்களுக்காக அரசுப் பத்திரங்களுக்கு இணையாகக் கருதப்படும்.

வழங்கப்படும் விலை: ரூ. 98 சதவிகிதம்

1980 பிப்ரவரி 12-ஆம் நாள் அன்று அதே சம விகிதத்தில் திரும்பப்பெறத்தக்கது.

1968 பிப்ரவரி 12-ஆம் நாள் முதல் பணமாகவோ 'காசோலை'யாகவோ தொகை பெறப்படும்; ஆனல், மொத்தம் சுமார் ரூ. 275 இலட்சம் வசூலானதும், முன்னறிவிப்பின்றி வசூல் நிறுத்தப்பட்டுவிடும். எக்காரணத்தைக் கொண்டும் 1968 பிப்ரவரி 17-ஆம் நாள் அலுவலக நேர முடிவுக்குப் பின் நீடிக்கப்பட மாட்டாது.

சென்னை, ஆமதாபாத், பம்பாய், கல்கத்தா, ஐதராபாத், கான்பூர், புதுடில்லி ஆகிய இடங்களிலுள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா உள்ளூர்த் தலைமையகங்களிலும், தமிழ்நாட்டில் உள்ள அதன் எல்லாக் கிளைகளிலும், பெங்களூர்—பெங்களூர் சிட்டி கிளைகளிலும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

மேற்சொன்ன எல்லா அலுவலகங்களிலும், தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும், தமிழக மின்கழகத்தின் எல்லா அலுவலகங்களிலும் விண்ணப்பப் படிவங்களும், நிபந்தனைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய நகல்களும் கிடைக்கும்.

## பட்டமளிப்பு விழாவில் மாணவர் வெளிநடப்பு

திருப்பதி, பிப். 11—

வெங்கடேசுவரா பல்கலைக் கழகத்தின் 11-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றபோது, இந்தி எதிர்ப்பு முழக்கங்களுடன் மாணவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

## அமைச்சர் முயற்சியால் வேலைநிறுத்தம் முடிந்தது

சென்னை, பிப். 12—

தமிழகத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செ. மாதவனுக்கும்—தொழிற்சங்கத்துக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின், திருவொற்றியூர் ராயல் என்பீல்ட் நிறுவனத்தின் தொழிலாளர்கள், வேலைநிறுத்தத்தைத் திரும்பப் பெற்று வேலைக்குத் திரும்பினர்.

ESTD: 21-3-52. தபால் மூலம் GOVT REGD: 3072.

**இலவசக் கல்வி போதனை**

குரூப் வகுப்புகள் ஆரம்பம்: 11--3--68

ஆண், பெண் ஆகிய இருபாலரும் ஆசிரியர்களும் கீழ்க்கண்ட வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்று சர்க்கார் 1968—69-ம் வருடத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கு உத்தரவாதத்துடன் மாதம் இரு முறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பிப் பயிற்சியளித்து வருகிறேம்.

1. திரிபுவன் M.A., B.A., B.L., I.A. & I.Com.; 2. U.P.I A; 3. மதராஸ் மெட்ரிகுலேஷன்; 4. பனரஸ் மெட்ரிக்; 5. ஆந்திரா மெட்ரிக்; 6. மதராஸ் P.U.C.; 7. தமிழ் வித்துவான் வகுப்புகள்; 8. சர்வீஸ் கமிஷன் (Oct. 68); 9. XI Std. S. S. L. C.; 10. கைத்தறி நெசவு; 11. விவசாயம்; 12. Accountancy; 13 Overseer; 14. போஸ்டல் கிளார்க்; 15. போஸ்ட்மென்; 16. கிராம மணியம்; 17. கிராமக் கர்ணம்; 18. ஹிந்தி வகுப்புகள்; 19. ஹோமியோபதி (தமிழ் & ஆங்கிலம்); 20. பேசிக் ஆங்கிலம்; 21. பிரி-மெட்ரிக்; 22. S.S.L C. For Women.

உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

1. S.S.L.C. தேறியவர்களும், ஆசிரியர்களும் 1-A. வகுப்பில் சேர்த்துகொள்ளலாம். 2. (8-ம் வகுப்பு) III, IV, V படிவம் பயின்ற மாணவிகள் XI Std S.S.L.C. தேர்வில் கலந்துகொள்ளலாம். மேற்கண்ட வகுப்புகளின் முழு விவரங்கட்கு 15 nP. தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்றுப் பயனடைய உங்களை அன்புடன் அழைக்கிறேம்.

★ தமிழகத்தின் தனிப்பெரும் தபால் கல்வி ஸ்தாபனம் ★

**ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட் (T)**

ரிஷிவந்தியம் S. O., தென்னுற்காடு ஜில்லா, தென் இந்தியா

கிளைகள்: சிலோன், மலேசியா, தென்னுப்பிரிக்கா & மாரிஸஸ்

## ஒளிமிக்க எதிர்காலம்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தொழிலாளர்களின் உரிய நலன்களைப் பாதுகாக்கவேண்டிய இடர்மிகுந்த இந்த நிலையில், நிர்வாகத்தினருக்கும்—தொழிலாளருக்கும் இடையே இணக்கம் ஏற்படுத்தி நமது மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கான சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்குப் பொதுவாய் முயற்சி எடுத்து வந்திருக்கிறது.

வேளாண்மை உற்பத்தி பெருகுவதன் மூலமும், வங்கி கடன் வசதிகள் தாராளமாய்க் கிட்டும் நிலை உருவாகுவதன் மூலமும், தொழில் துறையில் உற்பத்தி விரைவில் பெருகும் என்று எதிர்பார்க்கிறேம்.

தொழில் வளர்ச்சியின் வாயிலாகவே தொழில் தேர்ச்சி பெற்ற நம் மக்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு வசதிகளைத் தோற்றுவிக்க முடியும் என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது; இதற்கிணங்க, புதிய தொழில்களை நிறுவ முன்வருகிற அல்லது ஏற்கனவே உள்ள தொழில்களை விரிவுபடுத்துகிற தொழில் முனைவர்களுக்கு அரசு எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும்.

பெரிய தொழில் திட்டங்களில் மத்திய அரசு செய்யும் முதலீடுகளின் நியாயமானபங்கினைப்பெறுவதற்குத் தனக்குள்ள உரிமையைக் குறித்து மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்திவரும்.

1969--70-ல் நான்காம் திட்டத்திற்கு இறுதிவடிவம் கொடுக்கலாமென்று தள்ளிப் போடப்பட்டுள்ளது; பொருளாதாரக் கூறிலும், தொழில் நுட்ப முறையிலும் ஏற்றதொரு திட்டமென்று உறுதி செய்யப்பட்ட சேலம் உருக்காலைத் திட்டம் புதிய நான்காம் திட்டத்தில் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டுமென்று மாநில அரசாங்கம் கண்டிப்பாய் வற்புறுத்தும்.

### வாக்காளர் பட்டியல் திருத்தம்

இக்கூட்டத் தொடரில் சட்டம் இயற்றுகின்ற பணி அதிக அளவில் இல்லை.

தற்போதைய சட்ட விதித்துறைகளுக்கிணங்க, சென்னை மாநகராட்சி மன்றத்திற்கும், நமது மாநிலத்திலுள்ளநகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் தேர்தல்கள் நடத்துவதற்குச் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களே பின்பற்றப்படுகின்றன.

1966-ம் ஆண்டுவரையில் சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் ஆண்டுதோறும் திருத்தப்பட்டு வந்தன. எனவே, உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு அன்றுவரை திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் எப்போதுமே கிடைத்து வந்தன.

சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களைப் புதுப்பிப்பது பற்றிய சட்டத்தில் செய்துள்ள திருத்தங்களுக்கிணங்க, சட்டப் பேரவைத் தொகுதிகள் அனைத்திலும் ஒரு பொதுத் தேர்தலுக்கு அல்லது இடைத் தேர்தலுக்கு முன்னதாக மட்டுமே—அல்லது, தேர்தல் ஆணைக்குழு சிறப்பாக ஆணையிடுகிற பிறிதொரு சமயத்தில் மட்டுமே வாக்காளர் பட்டியல்கள் திருத்தப்படவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்காகச் சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களைத் திருத்துவதற்கு இயலாதென்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனவே, உள்ளூராட்சிமன்றங்களுக்கான வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதற்கோ, திருத்துவதற்கோ உள்ளூராட்சிமன்றங்களை முறைப்படுத்துகிற சட்டங்களான—சென்னை மாநகராட்சி மன்றச் சட்டம்-1919; தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்-1920; தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்-1958;—ஆகிய இச்சட்டங்களை ஏற்றவகையில் திருத்துவதன் மூலம் அதிகாரங்களை மேற்கொள்ளுவது அவசியமாகிறது. இது குறித்த சட்டவரைவு ஒன்று சட்டமன்ற அவைகளின் நடப்புக் கூட்டத் தொடரில் முன்வைக்கப்படும்.

## திருக்குறளின் பர்மியப் பிரதி

### ஊ-தாண்டுக்கு அன்பளிப்பு

புதுடில்லி, பிப். 12—

திருக்குறளின் பர்மிய மொழிபெயர்ப்புப் பிரதி ஒன்றை, ஐ. நா. பொதுச்செயலாளர் ஊ-தாண்டுக்கு, டெல்லி தமிழ்ச் சங்கம், அன்பளிப்பாக வழங்கியது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.